**செய்தி வெளியீடு எண்:188** **நாள்:17.03.2013**

<u>செய்தி வெளியீடு</u>

'கல்விக்கு வறுமை விரோதி' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால், கல்வி கற்பதற்கு வறுமை தடையாக இருக்கக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில், தமிழகத்திலுள்ள அனைத்து ஆதிதிராவிடர் குழந்தைகளும் இடைநிற்றல் இன்றி கல்வி கற்று, சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், அவர்களுக்கு கட்டணமில்லா கல்வி, மதிய உணவு, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா கல்வி உபகரணங்கள் மற்றும் சீருடை, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கற்பிப்பு கட்டணம் செலுத்துதல், ஊக்கத் தொகை வழங்குதல், தங்கி பயிலும் விடுதிகள் கட்டுதல் போன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் தற்பொழுது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1,300 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் கல்வி கற்பதற்காக அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இடைநிற்றல் கணிசமாக குறைந்துள்ளது.

எனவே அதிக அளவு மாணவ, மாணவியர் சேர்க்கையின் காரணமாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் உள்ள அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லாததால், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில், இந்த ஆண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 44 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களின் விடுதிகளுக்கு 35 கோடியே 4 லட்சம் ரூபாயில் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவற்றில் மலைப் பகுதிகளில் விடுதி ஒன்றுக்கு 88.53 லட்சம் ரூபாய் என்ற வீதத்தில் 50 மாணவ/மாணவியர் தங்கக்கூடிய 3 விடுதிகளும், சமதளப் பகுதிகளில் கட்டப்படும் விடுதி ஒன்றுக்கு 78.99 லட்சம் வீதத்தில் 50 மாணவ/மாணவியர் தங்கக்கூடிய 41 விடுதிகள் கட்டப்படும்.

இந்த விடுதிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் காடம்பாறை, தொண்டாமுத்தூர், எஸ்.புங்கன்பாளையம், வால்பாறை, சின்னத்தடாகம் ஆகிய 5 இடங்களிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் களிமந்தை, பழநி ஆகிய 2 இடங்களிலும், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், நாமகிரி பேட்டை ஆகிய 2 இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒக்கூர், வல்லத்திரா கோட்டை, பி.அழகாபுரி, மேலதானியம், ஒடுகம்பட்டு, கீரனூர் ஆகிய 6 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் நெய்மலை, மானூர், தலைவாசல் ஆகிய 3 இடங்களிலும், சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி, வேதியரேந்தல், சித்தலூர்

ஆகிய 3 இடங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் ஓவேலி என்ற இடத்திலும், திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் காஞ்சி மற்றும் கலசப்பாக்கம் ஆகிய இடங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் நாசரேத்திலும், திருப்பூர் மாவட்டத்தில் வெள்ளக்கோவிலிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், துலுக்கார்பட்டி, ராதாபுரம், தென்மலை, விஸ்வநாதபேரி ஆகிய 5 இடங்களிலும், திருச்சி மாவட்டத்தில் பொய்கைப்பட்டி, வாளசிராமனி, கானகிளியநல்லூர் ஆகிய 3 இடங்களிலும், விழுப்புரம் மாவட்டத்தில் வீரபாண்டி, செவலப்பாரை, செஞ்சி ஆகிய 3 இடங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கல்லாவி என்ற இடத்திலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம், நாகல்கேணி, தையூர் ஆகிய 3 இடங்களிலும், வேலூர் மாவட்டத்தில் ஆற்காடு, அரக்கோணம் ஆகிய 2 இடங்களிலும், என மொத்தம் 44 இடங்களில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை, ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களிடையே கல்விப் பயிலுவதை மேலும் ஊக்குவிக்க வழிவகை செய்கிறது.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 17.3.2013.